## 4

# இயேசுவின் சிந்தையில் இருந்து நம்முடைய சிந்தைக்கு

*இயேசு, மரித்தோரில் இருந்து தமது உயிர்த்தெழுதலினாலும், தேவனுடைய குமாரன், ஆண்டவர் மற்றும் கிறிஸ்து[1] என்ற தமது அந்தஸ்தினாலும், சகல அதிகாரமும் அவருக்குத் தரப்பட்டது. அந்த அதிகாரத்துவம் தற்போதய நாள்வரை எவ்வாறு நீட்டிக்கப்பட்டுள்ளது? சபை தொடங்குகையில், சுவிசேஷத்தைக் கேள்விப்பட்ட மக்கள் அதை இயேசுவுடன் முதல்நிலை அனுபவம் கொண்டிருந்தவர்களிடம் இருந்தோ அல்லது தனிப்பட்ட வகையில் பயிற்றுவித்து இருந்தவர்களை அறிந்த தனிநபர்களிடத்தில் இருந்தோ கேள்விப்பட்டனர் (காண்க லூக்கா 1:1-3; எபிரெயர் 2:3, 4). இவ்வாறு அவர்கள் செய்தது அவர் விரும்பிய வண்ணமாகவே இருந்தது என்பதை அறிதலில் அவர்கள் பாதுகாப்பாக இருக்க முடிந்தது. அவரது ஊழியம் மற்றும் அவருடன் நடந்து அவருடன் பேசியவர்களின் சாட்சியம் ஆகியவற்றில் இருந்து இருபது நூற்றாண்டுகள் கடந்துள்ள இன்றைய நாட்களில் நாம், அவரது அதிகாரத்துவத்தின் கீழ் வாழ்கிறோம் என்பதை எவ்வாறு நிச்சயப்படுத்திக் கொள்ள முடியும்?*

*அது ஒரு பொருட்டல்ல என்று கூறி, மக்களில் பலர் அந்தக் கேள்விக்குப் பதில் அளிப்பதைத் தவிர்த்து விடுகின்றனர். சிலர் முழுமையான சத்தியத்தில் (அல்லது முழுமையான அதிகாரத்துவத்தில்) விசுவாசம் கொண்டிராத காரணத்தினால் இதைக் கூறுகின்றனர். மற்றவர்கள், தங்கள் விசுவாசங்களுக்குக் காரணங்களைத் தரவேண்டிய அவசியத்தைக் காணாததால் இந்தக் கேள்வி ஒரு பொருட்டல்ல என்று நினைக்கலாம். முதல் குழுவினர், முற்றான உண்மை என்று எதுவும் இல்லை என்பதே முற்றான உண்மையாக உள்ளது என்று உரிமை கோரி, சுய முரண்பாட்டை எதிர்கொள்கின்றனர். அவர்களுக்கு சத்தியத்தைப் பற்றிப் பொதுவாகவும் தேவன், கிறிஸ்து ஆகியோருடனும் வேதாகமரீதியான மார்க்கத்துடனும் இணைவுகொண்டுள்ள சத்தியம் பற்றிப் போதிக்க வேண்டியது அவசியமாக உள்ளது. இரண்டாவது குழுவினர், கிறிஸ்தவர்கள் நமக்குள் இருக்கிற நம்பிக்கை பற்றி உத்தரவு சொல்லத் தயாராக இருக்க வேண்டும் என்ற போதனையைக் காணாது விட்டுவிடுகின்றனர் (1 பேதுரு 3:15). நாம் ஆராதிக்கிற வகையில் ஆராதிப்பது ஏன்? புதிய ஏற்பாடு போதிப்பது என்ன?*

### அவர் அதிகாரத்தை வழங்கினார்

மத்தேயு 16:19ல் இயேசுவை கிறிஸ்து என்று பேதுரு அறிக்கையிட்டதற்கு இயேசு பதில் செய்தார். இந்த அறிக்கையின் விளைவாகப் பேதுருவிடம் இயேசு, "... பூலோகத்திலே நீ கட்டுகிறது எதுவோ அது பரலோகத்திலும் கட்டப்பட்டிருக்கும், பூலோகத்தில் நீ கட்டவிழ்ப்பது எதுவோ அது பரலோகத்திலும் கட்டவிழ்க்கப்பட்டிருக்கும்" என்று கூறினார். இதற்கு இரு அதி

காரங்களுக்குப் பின்பு, பரலோகத்தில் கட்ட மற்றும் கட்டவிழ்க்கப் படுவதற்கான இந்த அதிகாரம் பன்னிருவரின் முழுக் குழுவிற்கும் விரிவாக்கப்பட்டது. மத்தேயு 18:1ம் வசனம், இயேசு அந்த அதிகாரத்தில் முழுக்குழுவிற்கும் பேசிக்கொண்டிருந்தார் என்று காண்பிக்கிறது. 16:19ல் அவர் பேதுருவுக்கு மாத்திரம் கூறிய அதே விஷயத்தை, 18:18ல் அவர்கள் அனைவருக்கும் அவர் கூறினார்: "பூலோகத்தில் நீங்கள் எவைகளைக் கட்டுவீர்களோ அவைகள் பரலோகத்திலும் கட்டப்பட்டிருக்கும்; பூலோகத்திலே நீங்கள் எவைகளைக் கட்டவிழ்ப்பீர்களோ அவைகள் பரலோகத்திலும் கட்டவிழ்க்கப்பட்டிருக்கும் என்று, மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்."

"கட்டப்பட்டிருக்கும்" என்ற கிரேக்க வினைச் சொல்லை NASB வேதாகமம் சரியாக மொழிபெயர்த்துள்ளது.[2] மத்தேயு 16:19 மற்றும் 18:18ல் உள்ள மிகவும் சரியான இந்த மொழிபெயர்ப்பு, அப்போஸ்தலிக்க அதிகாரத்துவம் பற்றிய இன்றியமையாத உண்மையொன்றை நாம் புரிந்து கொள்ள உதவுகிறது. இயேசு, தமது அப்போஸ்தலர்களுக்கு அவர்களின் சொந்த வகையில் அவர்களுக்கு வரும் கேள்விகளை முடிவு செய்வதற்கான சுயாதீனத்தைக் கொடுக்கவில்லை. அப்படிப்பட்ட ஒரு ஓட்டம் அப்போஸ்தலர்களுக்கு இயேசுவைக் காட்டிலும் அதிக அதிகாரத்துவத்தைக் கொடுத்திருக்கும். கட்டுவிக்க அல்லது கட்டவிழ்க்க அவசியமானவை எவை என்று முடிவு செய்தலை, அவர்களுக்கு அவர் விட்டுவைத்திருந்தார் என்றால், அவர் கூறியதற்கு அவர்கள் கட்டுப்பட்டு இருப்பதற்குப் பதிலாக அவர்கள் கூறியதற்கு, அது தவறாக இருந்தாலும் அதற்கு அவர் கட்டுப்பட்டு இருந்திருப்பார். அதிர்ஷ்ட வசமாக, மூலகிரேக்க மொழி வேதாகமத்தில் இவ்வசனங்களின் மொழிநடையானது, எவ்வாறு செயல்படுவது என்று *தீர்மானம் பண்ணும்* அதிகாரத்தையல்ல ஆனால் ஏற்கனவே முடிவு செய்யப்பட்டுள்ளவற்றைச் *செயல்படுத்துவதற்கு* அதிகாரத்துவத்தை அப்போஸ்தலர்களுக்கு இயேசு கொடுத்தார் என்பதைத் தெளிவு படுத்துகிறது. அதிகாரத்துவம் என்பது அவர்களில் தங்கியிருக்கவில்லை, ஆனால் அவர்களுக்கு *பிரதிநிதித்துவப்படுத்தப்பட்டிருந்தது.* பரலோகத்தால் ஏற்கெனவே தீர்மானிக்கப்பட்டவைகளை மாத்திரம் அவர்கள் கடத்த முடியும்.

பவுலின் எழுத்துக்களில் இந்தச் செயல்முறை எவ்வாறு செயல்பட்டது என்று நாம் காணுகிறோம். கலாத்தியர் 1:11, 12ல் அவர் தமது போதனைகள் தம்மிடத்தில் இருந்து தோன்றவில்லை என்பதை வலிவாகக் கூறினார். "மேலும், சகோதரரே, என்னால் பிரசங்கிக்கப்பட்ட சுவிசேஷம் மனுஷருடைய யோசனையின்படியானதல்லவென்று உங்களுக்குத் தெரிவிக்கிறேன். நான் அதை ஒரு மனுஷனால் பெற்றதுமில்லை. மனுஷனால் கற்றதுமில்லை, இயேசுகிறிஸ்துவே அதை எனக்கு வெளிப்படுத்தினார்." இதனால்தான் அவர், தாம் சகோதரர்களுக்குப் போதித்திருந்த சுவிசேஷத்தில் இருந்து அவர்கள் விலகிப்போய்விடக்கூடாது என்று வலியுறுத்தினார். கலாத்தியர் 1:8ல் அவர், "நாங்கள் உங்களுக்குப் பிரசங்கித்த சுவிசேஷத்தையல்லாமல், நாங்களாவது, வானத்திலிருந்து வருகிற ஒரு தூதனாவது, வேறொரு சுவிசேஷத்தை உங்களுக்குப் பிரசங்கித்தால், அவன் சபிக்கப்பட்டவனாயிருக்கக்கடவன்" என்று கூறினார்!

கட்ட மற்றும் கட்டவிழ்க்க, பவுலின் அதிகாரத்துவம் உள்ளதென்ற அவரது நம்பிக்கையானது 2 கொரிந்தியர் 5:20ம் வசனத்திலும் தெளிவாகிறது, அங்கு அவர் தம்மை "தேவனானவர் எங்களைக்கொண்டு புத்திசொல்லுகிறதுபோல,

நாங்கள் கிறிஸ்துவுக்காக ஸ்தானாபதிகளாயிருந்து, ...” என்று குறிப்பிட்டார். இந்த சந்தர்ப்பப் பொருளில் பவுல், தேவனுடைய நற்செய்தியை எல்லாக் கிறிஸ்தவர்களும் பகிர்ந்து கொள்வதன் முக்கியத்துவம் பற்றிக் கவனம் குவிக்க வில்லை; அந்த சத்தியத்தை மற்ற வசனப்பகுதிகள் போதிக்கின்றன (காண்க மத்தேயு 28:19, 20; 2 தீமோத்தேயு 2:2). இவ்விடத்தில் பவுல், தாம் தேவனு க்காகப் பேசுவதாகவும், தாம் ஒரு கடவுவழியாக - செல்லும் வழியாக - இருந்து தம் மூலமாகத் தமது கர்த்தரின் செய்தியும் அதிகாரத்துவமும் மற்றவர்களுக்கு அறிவிக்கப்படுவதாகவும் உரிமைகோரினார். பவுல் சகல அதிகாரமும் கொண்ட ஆண்டவரின் வார்த்தையைச் சார்ந்திருந்தார்.

## அவர் அதிகாரத்தை உத்தரவாதப்படுத்தினார்

பவுலும் மற்ற அப்போஸ்தலர்களும் இயேசுவின் அதிகாரத்துவம் கொண்ட போதனையைத்தான் அவர்கள் மற்றவர்களுக்குக் கொடுத்ததாக மிகவும் நிச்சய மாயிருக்க முடிந்தது எவ்வாறு? இதற்குப் பதிலானது, யோவான் 14-16ல் இயேசு தமது அப்போஸ்தலர்களுக்கு உரைத்த நிறைவு வார்த்தைகள் பற்றிய விபரத்தில் காணப்படுகிறது:

> “நான் உங்களுடனே தங்கியிருக்கையில் இவைகளை உங்களுக்குச் சொன்னேன். என் நாமத்தினாலே பிதா அனுப்பப்போகிற பரிசுத்த ஆவியாகிய தேற்றரவாளனே எல்லாவற்றையும் உங்களுக்குப் போதித்து, நான் உங்களுக்குச் சொன்ன எல்லாவற்றையும் உங்களுக்கு நினைப்பூட்டுவார்” (யோவான் 14:25, 26).

> “இன்னும் அநேகங்காரியங்களை நான் உங்களுக்குச் சொல்ல வேண்டியதாயிருக்கிறது, அவைகளை நீங்கள் இப்பொழுது தாங்க மாட்டீர்கள். சத்திய ஆவியாகிய அவர் வரும்போது, சகல சத்தியத்திற் குள்ளும் உங்களை நடத்துவார்; அவர் தம்முடைய சுயமாய்ப் பேசாமல், தாம் கேள்விப்பட்டவைகள் யாவையுஞ்சொல்லி, வரப்போகிற காரியங்களை உங்களுக்கு அறிவிப்பார். அவர் என்னுடையதில் எடுத்து உங்களுக்கு அறிவிப்பதினால் என்னை மகிமைப்படுத்துவார். பிதாவினு டையவைகள் யாவும் என்னுடையவைகள்; அதினாலே அவர் என்னு டையதில் எடுத்து உங்களுக்கு அறிவிப்பார் என்றேன்” (யோவான் 16:12-15).

இவ்வசனப் பகுதிகள், இயேசுவின் அதிகாரத்துவம் நம்மை எவ்வாறு கட்டுப்படுத்துகின்றன என்பதை நாம் புரிந்துகொள்ள உதவுகின்றன. அப்போஸ்தலர்களுக்குச் சகலவிஷயங்களையும் ஆவியானவர் போதிக்க வேண்டியிருந்தது (14:26). இயேசு கூறியிருந்த விஷயங்களை அவர்கள் மறந்து போய்விடாத வகையில் ஆவியானவர் அவற்றை அவர்களுக்கு நினைவூட்டுவார் (14:26). அவர்களை ஆவியானவர், இயேசு தமது ஊழியத்தின்போது, “அவர்களால் அப்போது தாங்க” இயலாது என்ற காரணத்தினால் (16:12, 13) அவர்களுக்குக் கூறியிராதிருந்த சில விஷயங்கள் உட்பட, “சகல சத்தியத்திற்குள்ளும்” வழிநடத்துவார். அவர்கள், அதிகாரத்துவம் உடையவரான இயேசுவினிடத்தில்

*(16:12, 13) கேள்விப்பட்டிருந்தவற்றை, அவர்களுக்கு ஆவியானவர் கூறுவார் என்ற காரணத்தினால், இந்தப் புரிந்து கொள்ளுதல் வரும். கடைசியாக, ஆவியானவர் குமாரனுடையதை எடுத்து அதை உரைப்பார் அல்லது அதை அப்போஸ்தலர்களிடத்தில் ஒப்புவிப்பார் (16:15).*

*இந்தச் செயல்முறை புதிய ஏற்பாட்டு வசனப்பகுதிகளில், மிகவும் குறிப்பிடத்தக்க வகையில், 1 கொரிந்தியர் 2:9-13ல் எவ்வாறு நடைமுறையில் செயல்பட்டது என்பதை நாம் காணுகிறோம். கொரிந்து நகரின் சபையில் இருந்த பிரிவினையின் பிரச்சனையைப் பவுல் எதிர்கொள்ளுகையில், அவர் உறுப்பினர்களின் உலகப்பிரகாரமான அன்பு, மனிதரீதியான ஞானம் ஆகியவற்றிற்கு அறைகூவல் விடுத்தார் (1 கொரிந்தியர் 1:18-2:5).[3] அவர், மனிதகுலத்தின் பாவங்களுக்காக மரிக்கும்படி தேவன் தமது குமாரனை அனுப்பியபோது, அந்த விஷயத்தைத் தேவன் மனித தர அளவையின்படியான ஞானத்தில் செய்யவில்லை என்பதைச் சுட்டிக்காண்பித்தார். அவரது திட்டத்தை யூதர்கள் இடறுதலுக்கான கல்லாகவும் அதை கிரேக்கர்கள் மதியீனமாகவும் கருதினார்களே (1 கொரிந்தியர் 1:23).[4] இருப்பினும், இது ஞானம் கொண்டிருத்தல் மற்றும் ஞானமற்று இருத்தல் ஆகியவற்றிற்கு இடையிலான நேர்மாறாக இருக்கவில்லை, ஆனால் இது* தேவனுடைய *ஞானத்திற்கும்* மனிதருடைய *ஞானத்திற்கும் இடையிலான நேர்மாறாக உள்ளது என்பதைப் பவுல் வலிவாக உரைத்தார். இந்த நேர்மறை அவர் 1 கொரிந்தியர் 2:6, 7ல் முக்கியத்துவப்படுத்திப் பின்வருமாறு கூறினார்:*

> அப்படியிருந்தும், தேறினவர்களுக்குள்ளே ஞானத்தைப் பேசுகிறோம்; இப்பிரபஞ்சத்தின் ஞானத்தையல்ல, அழிந்துபோகிறவர்களாகிய இப்பிரபஞ்சத்தின் பிரபுக்களுடைய ஞானத்தையுமல்ல, உலகத்தோற்றத் திற்குமுன்னே தேவன் நம்முடைய மகிமைக்காக ஏற்படுத்தினதும், மறைக்கப்பட்டதுமாயிருந்த இரகசியமான தேவஞானத்தையே பேசுகிறோம்.

*பவுல் தெய்வீக ஞானத்தை எவ்வாறு பெற்றுக்கொண்டார்? அந்தக் கேள்விக்கு அவர் 1 கொரிந்தியர் 2:9-13ல் பதில் அளித்தார். (1) அவரும் மற்ற அப்போஸ்தலர்களும்[5] "தேவன் தங்களுக்கு ஆவியானவரால் வெளிப்படுத்தி யிருந்த" காரணத்தினால் இவ்விஷயங்களை அறிந்திருந்ததாக அவர்கள் அறிவித்தனர் (வசனம் 10). (2) ஆவியானவரால் வெளிப்படுத்தப்பட்ட சத்தியங்கள் "தேவனுடைய சிந்தையில்" தோன்றியவை என்பதால் அவைகள் நம்பப்படக் கூடும் (வசனம் 11). (3) பவுலும் மற்றவர்களும் இந்த வெளிப்படுத்துதலை "ஆவியானவரால் போதிக்கப்பட்ட வார்த்தைகளில்" பெற்றுக் கொண்டிருந்தனர் (வசனம் 13). (4) ஆகவே, அப்போஸ்தலர்கள் போதித்தபோது, அவர்கள் தேவனிடத்தில் தொடங்கியிருந்த போதனையையே கொடுத்தனர் (வசனங்கள் 12, 13).*

*இந்த செயல்முறை மத்தேயு மற்றும் யோவான் சுவிசேஷ வசனப்பகுதி களுடன் பொருந்துகிறது. பவுல் தம்மிடத்திலோ அல்லது மற்ற அப்போஸ்தலர்களிடத்திலோ உருவான போதனையை முன்வைக்கவில்லை. மாறாக அவர் இந்த அதிகாரத்துவம் தமக்கு ஒப்புவிக்கப்பட்டிருந்தது என்ற*

காரணத்தால் அதிகாரத்துவத்துடன் பேசினார் (காண்க மத்தேயு 16:19; 18:18). அவர் தேவனுடைய ஆவியானவரிடத்தில் இருந்து தாம் கற்று அறிந்திருந்தவற்றை மாத்திரமே போதித்ததாக உரிமைகோரினார், அந்த ஆவியானவரே அதன் சரியான தன்மை பற்றி உத்தரவாதப் படுத்தினார் (காண்க யோவான் 14-16). பவுல் தமது செய்தியைப் பற்றிய நம்பிக்கையை 1 தெசலோனிக்கெயர் 2:13ல் பின்வருமாறு வெளிப்படுத்தினார்:

> ஆகையால், நீங்கள் தேவவசனத்தை எங்களாலே கேள்விப்பட்டு ஏற்றுக்கொண்டபோது, அதை மனுஷர் வசனமாக ஏற்றுக்கொள்ளாமல், தேவவசனமாகவே ஏற்றுக்கொண்டதினாலே நாங்கள் இடைவிடாமல் தேவனுக்கு ஸ்தோத்திரஞ் செலுத்துகிறோம்; அது மெய்யாகவே தேவவசனந்தான், விசுவாசிக்கிற உங்களுக்குள்ளே அது பெலனும் செய்கிறது.[6]

## முடிவுரை

இயேசு தமது அதிகாரத்துவத்தைத் தாம் தேர்ந்துகொண்ட செய்தியாளர்களிடத்தில் ஒப்புவித்து அதை உத்தரவாதப் படுத்தினார். பரிசுத்த ஆவியானவரை அனுப்பியதில், அவர் அந்தச் செய்தியாளர்கள் தமது போதனையை மறவாதிருப்பதை அல்லது அதை நடைமுறைப் படுத்துவதில் தவறு செய்யாதிருப்பதை உறுதிப்படுத்தினார். இது இன்றைய நாட்களில் நாம் அவரது அதிகாரத்துவம் கொண்ட போதனையைக் கொண்டுள்ளோம் என்பதை எவ்வாறு உறுதிப்படுத்துகிறது? அந்தக் கேள்விக்குப் பவுல் எபேசியர் 3:3-5ல் பதில் அளித்தார். தேவனுடைய திட்டத்தின் இரகசியமானது[7] அவருக்கு வெளிப்படுத்துதல் மூலம் அறியச் செய்யப்பட்டதாகவும், இந்த வெளிப்படுத்துதலின் உள்ளடக்கங்களைத் தாம் எழுதியிருந்ததாகவும், எபேசியருக்கு அவர் நினைவுபடுத்தினார். அவர் எழுதியிருந்தவற்றை அவர்கள் வாசித்தபோது, அவர்கள் "அதை நீங்கள் வாசிக்கையில் கிறிஸ்துவின் இரகசியத்தைக்குறித்து [அவருக்கு] உண்டாயிருக்கிற அறிவை அறிந்துகொள்ளலாம்; இந்த இரகசியம் இப்பொழுது அவருடைய பரிசுத்த அப்போஸ்தலருக்கும் தீர்க்கதரிசிகளுக்கும் ஆவியானவராலே வெளிப்படுத்தப்பட்டிருக்கிறதுபோல, முற்காலங்களில் மனுபுத்திரருக்கு அறிவிக்கப்படவில்லை" (வசனங்கள் 5, 6). வெளிப்படுத்துதலை எழுதி வைத்தல் என்பது அதை நிரந்தரமாக்கிற்று; இயேசு விசேஷமாகத் தேர்ந்துகொண்ட தமது செய்தியாளர்களுக்குப் பரிசுத்த ஆவியானவர் மூலமாக கொடுத்த அதே செய்தியை நாம் இன்றைய நாட்களில் வாசிக்க முடிகிறது. அப்போஸ்தலர்கள் கூறியுள்ளவற்றை, நாம் அறியும்படி இயேசு விரும்புகிற சத்தியத்தைக் கற்றுக்கொள்ளத் திரும்பத் திரும்ப வாசிக்கும்படியான வடிவத்தில், புதிய ஏற்பாட்டில் நாம் பெற்றுள்ளோம்.

இது, நாம் நம்புகிற மற்றும் செய்கிற காரியங்களின் அதிகாரத்துவம் வேதவசனப் பகுதிகளில் உள்ளது என்று அர்த்தப்படுகிறது. இயேசு வேதாகமத்தில் இருக்கிறார் என்பதால் அவர் அதிகாரத்துவம் கொண்டுள்ளார் என்று நாம் கூறுவதில்லை. வேதாகமம் இயேசுவின் வார்த்தையாக இருப்பதால், வேதாகமம் அதிகாரத்துவம் கொண்டுள்ளது என்று நாம் கூறுகிறோம்.[8] அவர் ஆண்டவராக, வானத்திலும் பூமியிலும் சகல அதிகாரத்துவம் கொண்ட ஒருவராக இருக்கிறார்

*(மத்தேயு 28:18).* இயேசு மறுரூபமானபோது வானத்திலிருந்து வந்த குரல், அப்போஸ்தலர்களுக்குக் கூறியது போன்று, நாம் “அவருக்குச் செவிகொடுக்க” வேண்டும் *(மத்தேயு 17:5).*

வேதாகமம் தேவனுடைய வார்த்தையாக இருப்பதால், அவருடைய அதிகாரத்தினால் தாங்கப்படுவதால் நாம் வேத வசனங்களை தீவிரமாக எடுத்துக்கொள்ள வேண்டும். நாம் வேதாகம போதனையுடன் ஒன்றைக் கூட்டவோ அல்லது அதிலிருந்து ஒன்றைக் குறைக்கவோ கூடாது, ஆனால் அதை தேவன் விரும்புகிறவகையில் நடைமுறைப்படுத்த வேண்டும்.

---

குறிப்புகள்

[1]மத்தேயு 28:18; நடபடிகள் 2:36; ரோமர் 1:4; பிலிப்பியர் 2:9-11; எபிரெயர் 1:1-4 ஆகிய வசனப்பகுதிகளைக் காணவும். [2]ஒவ்வொரு விஷயத்திலும் இரு வினைச் சொற்களைப் பயன்படுத்தி, கிரேக்க மொழியானது இந்த வாக்கியத்தின் இரு பகுதி களிலும் மிகச்சரியானதாக உள்ளது. முதலாவதான *estai* என்ற எதிர்கால வினைச் சொல்லானது “இருக்க” (*eimi*) என்ற வினைச்சொல்லின் சுட்டிக்காண்பிக்கும் வடிவமாக உள்ளது. இந்த வினைச் சொல் “கட்டுதல்” மற்றும் “கட்டவிழ்த்தல்” என்ற வார்த்தைகளின் நிகழ்முற்று வினைச் சொல்லுடன் இணைக்கப்பட்டுள்ளது. கிரேக்க மொழியில் கடந்த கால முற்று வினைச்சொல்லானது, கடந்த காலத்தில் நடைபெற்ற ஒரு செயலின் விளைவு நிகழ்காலத்திலும் தொடரும் கருத்தைக் கொண்டுள்ளது. நேரடி அர்த்தத்தில், ஒவ்வொரு வார்த்தைக்கும் கவனம் கொடுத்து, இந்த வாக்கியம், “நீ பூமியில் எதையாவது கட்டினால், அது பரலோகத்தில் ஏற்கனவே கட்டப்பட்டிருக்கும், மற்றும் நீ பூமியில் எதையாவது கட்டவிழ்த்தால், அது பரலோகத்தில் ஏற்கனவே கட்டவிழ்க்கப்பட்டிருக்கும்” என்று மொழிபெயர்க்கப்பட முடியும். [3]“ஞானம்” என்பதற்கு *sophia* என்பது கிரேக்க வார்த்தையாக உள்ளது. *Sophia* என்பதன் கருத்து, குறிப்பாக பிளேட்டோ மற்றும் அரிஸ்டாட்டில் போன்ற மாபெரும் சிந்தனையாளர்களை, உலகத்திற்குக் கொடுத்தி ருந்த கிரேக்க கலாச்சாரத்தில் முக்கியமானதாக உள்ளது. இந்தக் காரணத்தினால், தெற்கு கிரேக்கத்தில் வாழ்ந்திருந்த கொரிந்தியர்கள் தங்கள் ஞானத்திற்காக அறியப்பட வேண்டும் என்ற விருப்பம் கொண்டிருந்ததில் வியப்பெதுவும் இல்லை. [4]“இடறுதலுக்கான கல்” என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள *skandalon* என்ற கிரேக்க வார்த்தையில் இருந்து நாம் “scandal” என்ற ஆங்கில வார்த்தையைப் பெற்றுள்ளோம். “மதியீனம்” என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள *morian* என்ற வார்த்தையில் இருந்து நாம் “moron” என்ற வார்த்தையைப் பெற்றுள்ளோம். சுவிசேஷ செய்தியானது ஒரு மோசடி என்று யூதர்கள் நினைத்தனர் என்றும் அது மனித ஞானத்தின் தர அளவைகளின்படி எந்தக் கருத்தையும் ஏற்படுத்தாதபடியால் அது மதியீனமானது என்று கிரேக்கர்கள் நினைத்தனர் என்றும் பவுல் கூறினார். இருப்பினும் ஏசாயா 55:8, 9ம் வசனங்களையும் 1 கொரிந்தியர் 1; 2ல் பவுலின் விவாதத்தினுடைய எஞ்சிய பகுதியையும் காணவும். [5]இவ்வசனத்தில் “நாம்” மற்றும் “எங்கள்” என்ற வார்த்தைகளின் பயன்பாட்டைக் கவனிக்கவும். பவுல், தாம் மட்டுமே தேவனுடைய சிந்தைகளின் வெளிப்பாட்டைப் பெற்றுக்கொண்டிருந்ததாகக் கூறவில்லை, ஆனால் அதைப் பெற்றுக்கொண்ட குழுவில் தாமும் ஒருவராக இருந்ததாகக் கூறினார். இந்த விவரிப்பானது யோவான் 14-16ன் போதனைக்கு இசைவிணக்கமாக உள்ளது, அங்கு இயேசு, ஒரு குழு என்ற வகையில் அப்போஸ்தலர்கள் தங்களுக்குத் தேவையான வெளிப்படுத்துதலைப் பெறுவார்கள் என்று வாக்களித்தார். சிலர், பவுல்

முழுமையாக அப்போஸ்தலரா அல்லவா என்று கேள்வி கேட்கின்றனர். அவர் மத்தேயு 16 மற்றும் 18ல் அல்லது யோவான் 14-16ன் வார்த்தைகள் கூறப்பட்ட வேளையில் அப்போஸ்தலர்களுடன் இருக்கவில்லையே. பின்பு எவ்வாறு அந்தக் கூற்றுகள் அவருக்கு நடைமுறைப்படுத்தப்பட முடியும்? பவுல், அப்போஸ்தலர் என்ற வகையில் தாம் விசேஷமாகத் தேர்ந்துகொள்ளப்பட்டிருந்ததாகவும் இவ்வாறாக தாம், பேதுரு, யாக்கோபு மற்றும் யோவான் ஆகியோரைப் போன்றே அதிகாரத்துவம் பெற்றுள்ளதால் தமக்கு இவைகள் நடைமுறைப்படுத்தப்பட முடியும் என்றும் வலிவாக உரைத்தார். பேதுருவும் மற்றவர்களும் இயேசுவுடன் நடந்த வேளையில் பவுல் அவர்களுடன் நடந்திருக்கவில்லை; ஆனால் அவர் தமது மனமாற்றம் மற்றும் புறஜாதியாருக்கு அப்போஸ்தலர் ஆகும்படியான கட்டளை ஆகியவற்றிற்குப் பின்பு (நடபடிகள் 9:1-19; 26:16-18), அவர்கள் பெற்றிருந்தது போன்ற அதே ஆசீர்வாதங்களையும் அதிகாரத்துவ ஒப்புவித்தலையும் அவர் பெற்றிருந்தார். [6]1 தெசலோனிக்கேயர் மற்றும் 1 கொரிந்தியர் ஆகிய இரு நிருபங்களுமே பவுலின் தொடக்கால எழுத்துக்களாகப் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்படுகின்றன, இவைகள் சிலுவை மரணத்திற்கு இருபது ஆண்டுகளுக்கு மேற்படாத காலகட்டத்தில் எழுதப்பட்டன. கிறிஸ்தவத்தை விமர்சிப்பவர்கள் சிலர், இவ்வரலாற்றின் அடிப்படை உண்மைகளைச் சுற்றிலும் பிற்பாடு பாரம்பரியக் கருத்துக்கள் ஏற்பட்ட காலத்தில், புதிய ஏற்பாடு தேவனால் ஏவப்பட்டது என்று கருத்து மேம்பட்டதாக உரிமை கோருகின்றனர். 1 தெசலோனிக்கேயர் 2:13 மற்றும் 1 கொரிந்தியர் 2:9-13 போன்ற வசனப்பகுதிகள், முதல் கிறிஸ்தவ போதகர்கள் பெற்றிருந்த ஏவப்பட்ட செய்தியானது அவர்களின் தொடக்ககால சொந்தப் போதனையின் பாகமாக இருந்தது என்று காண்பிக்கிறது. [7]“இரகசியம்” என்ற வார்த்தை *musterion* என்ற கிரேக்க வார்த்தையில் இருந்து மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. ஒருகாலத்தில் இரகசியமாக இருந்த விஷயமானது தேவனுடைய ஆவியானவரால் வெளிப்படுத்தப்பட்டது என்று பவுல் கூறினார். [8]புதிய ஏற்பாட்டின் காலகட்டம் வரையிலும் இயேசு காட்சிக்கு வராத காரணத்தால், அவரது அதிகாரத்துவம் பழைய ஏற்பாட்டில் உள்ளதா என்று சிலர் கேள்வி எழுப்பலாம். நார்மன் கெய்சர் என்பவர், “யூதத்துவ வேதவாக்கியங்கள் தேவனால் ஏவுதல் பெற்றவை என்று இயேசு போதித்திருந்தார் என்றால், அவரது உறுதிப்படுத்தப்பட்ட தெய்வீக அதிகாரத்துவத்தின் மீது, பழைய ஏற்பாடு என்பது எழுதப்பட்ட வடிவத்தில் உள்ள தேவனுடைய வெளிப்பாடு என்ற கருத்து நிலைநாட்டப்பட முடியும்” என்று எழுதினார் (Norman Geisler, *Christian Apologetics* [Grand Rapids, Mich.: Baker Book House, 1976], 353-54).